*World Christian Fellowship*
*www.wcflondon.com*
*wcflondon@gmail.com*

# இயேசுவின் ஊழிய ஸ்தலம்

***மத்தேயு 4:12-17, யோவான் காவலில் வைக்கப்பட்டான் என்று இயேசு கேள்விப்பட்டு, கலிலேயாவுக்குப் போய், 13. நாசரேத்தை விட்டு, செபுலோன் நப்தலி என்னும் நாடுகளின் எல்லைகளிலிருக்கும் கடற்கரைக்கு அருகான கப்பர்நகூமிலே வந்து வாசம்பண்ணினார். 14. கடற்கரையருகிலும் யோர்தானுக்கு அப்புறத்திலுமுள்ள செபுலோன் நாடும் நப்தலி நாடும் ஆகிய புறஜாதியாருடைய கலிலேயாவிலே, 15. இருளில் இருக்கும் ஜனங்கள் பெரிய வெளிச்சத்தைக் கண்டார்கள்; மரண இருளின் திசையிலிருக்கிறவர்களுக்கு வெளிச்சம் உதித்தது என்று, 16. ஏசாயா தீர்க்கதரிசியினால் உரைக்கப்பட்டது நிறைவேறும்படி இப்படி நடந்தது. 17. அதுமுதல் இயேசு: மனந்திரும்புங்கள், பரலோகராஜ்யம் சமீபித்திருக்கிறது என்று பிரசங்கிக்கத் தொடங்கினார்.***

*இஸ்ரவேல் ஜனங்கள் மேசியாவின் வருகைக்காய் ஜெபித்து, நம்பி, எதிர்பார்த்து காத்திருந்தனர். வரப்போகிற மேசியா நீதியுள்ள ராஜாவாகவும், ஆளுகை செய்கிறவராயும், இருளை வெளிச்சமாக்குகிறவராகவும் இருப்பார். இதுவே இஸ்ரவேல் ஜனங்களுடைய இருதயத்தின் பெரிய குமுறலாயிருந்தது.*

*இது பழைய ஏற்பாட்டில் தொடர்ச்சியாய் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.*

***ஏசாயா 50:10, உங்களில் எவன் கர்த்தருக்குப்பயந்து, அவருடைய தாசனின் சொல்லைக் கேட்டு, தனக்கு வெளிச்சமில்லாததினால் இருட்டிலே நடக்கிறானோ, அவன் கர்த்தருடைய நாமத்தை நம்பி, தன் தேவனைச் சார்ந்துகொள்ளக்கடவன்.***

*காணுமிடமெல்லாம் இருளாய் தோன்றுகிற இடத்திற்கு நீங்கள் பயணப்பட்டால், சோர்ந்துபோகாதீர்கள். கர்த்தரை தேவனாய் உறுதியாய் நம்புங்கள், அவரே ஒளியைக் கொண்டுவருவார்.*

***ஏசாயா 60:1-3, எழும்பிப் பிரகாசி; உன் ஒளி வந்தது, கர்த்தருடைய மகிமை உன்மேல் உதித்தது. 2. இதோ, இருள் பூமியையும், காரிருள் ஜனங்களையும் மூடும்; ஆனாலும் உன்மேல் கர்த்தர் உதிப்பார்; அவருடைய மகிமை உன்மேல் காணப்படும். 3. உன் வெளிச்சத்தினிடத்துக்கு ஜாதிகளும், உதிக்கிற உன் ஒளியினிடத்துக்கு ராஜாக்களும் நடந்துவருவார்கள்.***

*உலகத்தை இருள் சூழ்ந்திருக்கிறது என்றும் ஒளிக்காக தேவனை சார்ந்துகொள்ளவேண்டும் என்றும் தீர்க்கதரிசியின் இருதயம் வலியுறுத்துகிறது.*

***லூக்கா 2:25-32, அப்பொழுது சிமியோன் என்னும் பேர்கொண்ட ஒரு மனுஷன் எருசலேமில் இருந்தான்; அவன் நீதியும் தேவபக்தியும் உள்ளவனாயும், இஸ்ரவேலின்***

***ஆறுதல்வரக் காத்திருக்கிறவனாயும் இருந்தான்; அவன் மேல் பரிசுத்தஆவி இருந்தார். 26. கர்த்தருடைய கிறிஸ்துவை நீ காணுமுன்னே மரணமடையமாட்டாய் என்று பரிசுத்த ஆவியினாலே அவனுக்கு அறிவிக்கப்பட்டுமிருந்தது. 27. அவன் ஆவியின் ஏவுதலினால் தேவாலயத்திலே வந்திருந்தான். இயேசு என்னும் பிள்ளைக்காக நியாயப்பிரமாண முறைமையின்படி செய்வதற்குத் தாய் தகப்பன்மார் அவரை உள்ளே கொண்டு வருகையில், 28. அவன் அவரைத் தன் கைகளில் ஏந்திக்கொண்டு, தேவனை ஸ்தோத்திரித்து: 29. ஆண்டவரே, உமது வார்த்தையின்படி உமது அடியேனை இப்பொழுது சமாதானத்தோடே போகவிடுகிறீர்; 30. புறஜாதிகளுக்குப் பிரகாசிக்கிற ஒளியாகவும், உம்முடைய ஜனமாகிய இஸ்ரவேலுக்கு மகிமையாகவும், 31. தேவரீர் சகல ஜனங்களுக்கும் முன்பாக ஆயத்தம்பண்ணின 32. உம்முடைய இரட்சணியத்தை என் கண்கள் கண்டது என்றான்.***

*சிமியோன் ஒரு யூதனாய், இஸ்ரவேலிலும், நூற்றாண்டுகளாய் உலகம் முழுவதிலும் சூழ்ந்திருக்கிற காரிருளை அகற்றக்கூடிய ஒளியைக் குறித்து அறிவிக்கிறார். ஒளி வருகிறது என்னும் தகவல் அவருக்கு ஏற்கனவே தெரியும். மேசியாவாகிய அந்த பேரொளி உதிக்கும்வரை அவர் மரிப்பதில்லை என்று அவர் அறிந்திருந்தார். ஆகையினால், இருளிலிருந்த பழைய ஏற்பாடு, வரப்போகிற மேசியாவையும் அவருடைய நித்திய இராஜ்யம் என்னும் பேரொளியையும் முன்னறிவிக்கிறது.*

*அதுவே மத்தேயு 4ஆம் அதிகாரத்தின் முதல் ஒருசில வசனங்களின் கருப்பொருளாய் இருக்கிறது.*

*மத்தேயு இயேசுவை ஒரு ராஜாவாய் சித்தரிக்கிறார்.*

- *ராஜாவின் வம்சாவழி*
- *ராஜாவின் வருகை*
- *ராஜாவின் புகழ்ச்சி*
- *ராஜாவின் எதிர்பார்ப்பு*
- *ராஜாவின் அறிவிப்பாளர்*
- *ராஜாவின் உறுதிமொழி*
- *ராஜாவின் நன்மை*
- *ராஜாவின் செயல்பாடுகள்*

*11ஆம் வசனத்திற்கும் 12ஆம் வசனத்திற்கும் இடையில் ஒரு வருடம் இடைவெளி இருக்கிறது என்பதை கடந்த வாரத்தில் பார்த்தோம். அந்த ஒரு வருடத்தில் நடந்த சம்பவங்கள், யோவான் 1ஆம் அதிகாரத்திலிருந்து 4:42 வரை பதிவுசெய்யப்பட்டுள்ளது.*

*கடந்த வாரத்தில், இயேசுவின் ஊழியத்தின் சரியான நேரத்தைக் குறித்துப் பார்த்தோம். இந்த வாரம், சரியான இடத்தைக் குறித்துப் பார்ப்போம்.*

***மாற்கு 1:14-15, யோவான் காவலில் வைக்கப்பட்ட பின்பு, இயேசு கலிலேயாவிலே வந்து, தேவனுடைய ராஜ்யத்தின் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து: 15. காலம் நிறைவேறிற்று, தேவனுடைய ராஜ்யம் சமீபமாயிற்று; மனந்திரும்பி, சுவிசேஷத்தை விசுவாசியுங்கள் என்றார்.***

*கிறிஸ்தவர்கள் தேவனுடைய கால அட்டவணையின் படி பொறுமை காத்து, அவருடைய சித்தத்தின் நிறைவேறுதலுக்காய் காத்திருக்க வேண்டும். இயேசு கிறிஸ்து, பிதா அவருக்கு குறித்த சரியான நேரத்தில் தன் ஓட்டத்தைத் துவக்குகிறார்.*

*சரியான பட்டணத்தில், சரியான இடத்தில், அந்த குறித்த பகுதியில் தேவனுடைய தெய்வீகத் திட்டம் நிறைவேற்றப்படுகிறது.*

- *இது ஏரோது, யோவான் ஸ்நானகனை சிறையிலடைத்ததினால் வரவழைக்கப்பட்ட சூழ்நிலை கிடையாது.*
- *இது பரிசேயர்களைக் கண்டு இயேசு அஞ்சியதால் உண்டான சூழ்நிலை கிடையாது.*
- *இது நாசரேத்திலிருந்த எந்த ஒரு கூட்டத்தினராலும் ஏற்படுத்தப்பட்டதில்லை, மாறாக, தேவனால் உண்டானது.*

*ஏரோது கலிலேயாவின் அதிபதியாய் இருந்தும், ஏரோதைக் குறித்து இயேசு பயப்படவில்லை. இயேசு தன்னுடைய ஊழியத்தை அங்ஙனம் துவங்குவார் என்று ஏற்கனவே தீர்க்கதரிசிகளால் உரைக்கப்பட்டிருந்தது.*

*நூற்றாண்டுகளுக்கு முன்னரே இது தேவனுடைய திட்டமாயிருந்தது என்று ஏசாயா தீர்க்கதரிசி சொல்லியிருக்கிறார்.*

**வச.** *12,* **யோவான் காவலில் வைக்கப்பட்டான் என்று இயேசு கேள்விப்பட்டு, கலிலேயாவுக்குப் போய்,**

## *கலிலேயா:*


*"கலிலேயா" என்ற வார்த்தை "கலில்" என்ற எபிரெயப் பதத்திலிருந்து தோன்றியது. அதற்கு "வட்டம்" என்று அர்த்தம். இது கலிலேயக் கடலை சுற்றி வட்டமாய் அமைந்துள்ள பகுதி என்பதினால் அவ்வாறு அழைக்கப்படலாம்.*

*இது கின்னரெத் ஏரி என்றும் திபேரிய ஏரி என்றும் அழைக்கப்படுகிறது.*

*கிழக்கு பீடபூமியின் எல்லையில் அமைந்துள்ள அந்தக் கடல், இப்போது கிழக்குக் கடற்கரை என்று அழைக்கப்படுகிறது. மேற்கே மத்தியத்தரைக்கடலாலும், வடக்கே தெற்கு லீபனோன் மலைகளாலும், தெற்கில் யூதேயாவின் தெற்கு பகுதியினாலும் சூழப்பட்டுள்ளது.*

*அங்கே அந்த வட்டம் கலிலேயா கடலைச் சூழ்ந்துள்ளது.*

*இது வடக்கில்* **லித்தினி ஆற்றிலிருந்து** *எஸ்ட்ரேலோன் சமவெளிக்கும் அதற்கு கீழேயும் நீண்டுள்ளது.*




*மேற்கில், கடலோர சமவெளி பகுதியாக மத்தியத்தரைக்கடல் வரை நீண்டுள்ளது.*

*கிழக்கில், அந்நாட்களில் சீரியர்களின் கட்டுப்பாட்டிற்குள் இருந்த மலைகளால் சூழப்பட்டுள்ளது. தற்போது அது அரேபிய எல்லைகளுக்கு உட்பட்டிருக்கிறது.*

*பொதுவாக கலிலேயா தேசம், வடக்கிலிருந்து தெற்கில் 50 மைல்கள் தூரமும், கிழக்கிலிருந்து மேற்கில் 25 மைல்கள்; தூரமும், 25 மைல்கள் அகலமும், 50 மைல்கள் நீளமும் கொண்டது. இது கலிலேயாக் கடலை சுற்றியுள்ள பகுதி.*

*தற்போது இது அதிக மக்கள்தொகை கொண்ட நிலப்பரப்பாயுள்ளது.*

*பாலஸ்தீனத்தின் மிகவும் செழிப்பான நிலப்பரப்பு இது. பாலஸ்தீனத்தின் தெற்கு பகுதியில் டெல் அவிவ் என்னும் பட்டணத்தை சுற்றியுள்ள பகுதி. தெற்கு பகுதியில் கீழ்ழே அமைந்திருந்தது. அந்நாட்களில் யோப்பா என்று அழைக்கப்பட்டது.*

*தெற்குப் பகுதி வடக்கே கலிலேயாவுக்குச் செல்கிறது. ஹைஃபா நகரம் வடக்கின் முக்கிய நகரமாகவும், அந்த முழு கடற்கரைப் பகுதியும் சாரோன் பள்ளத்தாக்கு என்றும் அழைக்கப்படுகிறது.*

*சாரோனின் ரோஜா என்று நீங்கள் கேள்விப்படும்போது, புவியியல் அமைப்பை அறிந்துகொள்ள விழையும் அனைவருக்கும் அது செழிப்பான ஒரு ஸ்தலம் என்பது தெரியும். இது கர்மேல் பர்வதத்தினால் சூழப்பட்டுள்ளது.*

*கர்மேல் என்பது கடலை ஒட்டியுள்ள ஒரு மலைத்தொடர்ச்சி. ஒரு மலை அல்ல. கர்மேல் மலைத்தொடருக்கும் கடலுக்கும் இடைப்பட்ட பகுதியே இந்த செழிப்பான சாரோன் பள்ளத்தாக்கு.*

*கர்மேல் மலைக்கும் கலிலேயா கடலுக்கும் இடைப்பட்ட இன்னொரு செழிப்பான பகுதியும் உண்டு. இஸ்ரவேலிலேயே இது அதிகமான உற்பத்தி நடைபெறும் ஸ்தலமாய் உள்ளது.*

*இது மிகவும் வளமிக்க மண்வளம் கொண்ட பகுதி. அநேக ரக மரங்களை விளைவிக்கக்கூடியது. விவசாயத்தில் குறைந்த ஆர்வம் கொண்டவர்களையும் தன்னிடமாய் ஈர்க்கும் திறன் கொண்டது.*

*விவசாய அறிவு சற்றும் இல்லாதவர்கள் கூட கலிலேயாவில் எதையும் விளைய வைக்க முடியும்.*

*அதின் செழிப்பினால் அங்கு மக்கள் தொகை அதிகம். கலிலேயாவில் அந்நாட்களில் ஏறத்தாழ 204 கிராமங்கள் இருந்தது என்று யோசிபஸ் குறிப்பிடுகிறார். 25 மைல் அகலமும் 50 மைல் நீளமும் கொண்ட இந்த நிலப்பரப்பில் 204 கிராமங்கள் என்பது, நிலம் முழுமையையும் ஆக்கிரமித்திருக்கும்.*

*அதில் எந்த கிராமத்திலும் 15,000க்கும் குறைவான மக்கள் தொகை இல்லை என்றும் யோசிபஸ் குறிப்பிடுகிறார். அதாவது, கலிலேயாவின் மொத்த மக்கள் தொகை, 3மில்லியன் 60 ஆயிரம் என்று கணக்கிடலாம். அங்கு பெரும்பாலான மக்கள் வசித்துள்ளனர். அத்துடன் அவர்களுக்கு தேவையான காரியங்களை விளைவித்துக்கொள்ளக் கூடிய அளவிற்கு அவர்களுக்கு இடம் இருந்துள்ளதும் ஆச்சரியமாயுள்ளது.*

*இயேசு தன்னுடைய ஊழியத்தை ஆள்நடமாட்டம் இல்லாத வனாந்திரத்தில் துவக்கவில்லை. அவர் மக்கள் தொகை எண்ணிக்கையால் நிறைந்திருந்த கலிலேயாவில் துவக்கினார்.*

*அவர்கள் பாரம்பரியமற்றவர்கள். அங்கிருப்பவர்கள் பழைய பாரம்பரியத்தோடு போராடத் துணிந்தவர்கள் என்பதினால், அங்கிருப்பவர்களை ஆதாயப்படுத்துவது உகந்தது என்று இயேசு அறிந்திருந்தார்.*

***வச. 14, கடற்கரையருகிலும் யோர்தானுக்கு அப்புறத்திலுமுள்ள செபுலோன் நாடும் நப்தலி நாடும் ஆகிய புறஜாதியாருடைய கலிலேயாவிலே,***

*இது ஒருவகையான கேலி செய்தல். ஏனென்றால், கலிலேயா இஸ்ரவேலின் எல்லைக்கு உட்பட்டிருந்தது. ஆனால் வெகு காலத்திற்கு முன்பிலிருந்தே புறஜாதியரும் அங்கு அதிகப்படியாய் கலந்திருந்தனர்.*

*யூதர்கள் அதை இழிவாய் கருதினர். அங்கே வசித்த அதிகப்படியான புறஜாதி மக்களால் கலிலேயர்களை யூதர்கள் தாழ்வாய் கருதினர். கலிலேயா அந்நியர்களால் சூழப்பட்டிருந்தது.*

*கடற்கரையோரத்தில் கடற்பயணம் மேற்கொள்ளும் ஃபொனீசியர்கள் என்னும் பெரிய மக்கள் கூட்டமும் இருந்தது.*

*வடக்குப் பக்கத்தில் சீரியர்கள் இருந்தனர்.*

*தெற்குப் பக்கத்தில் சமாரியர்கள் இருந்தனர்.*

*மேற்கில் ஃபொனீசியர்கள் இருந்தனர்.*

*அவர்களுக்கு புறஜாதியினரின் பாதிப்புகள் அதிகம் இருந்தது. ஆகையால் அவர்கள் பாரம்பரிய சடங்குகளுக்கு உட்பட்டவர்களில்லை. அவர்கள் புதியவைகளை ஏற்றுக்கொள்ளும் மனப்பக்குவம் கொண்டவர்கள் என்பதை இயேசு நன்கு அறிந்திருந்தார். அவர் அந்த இடத்தை தன்னுடைய ஊழியத்திற்காய் தேர்ந்தெடுத்தார்.*

*மேலும் உலக நெடுஞ்சாலைகள், கிழக்கிலிருந்து மேற்கு நோக்கிச் செல்லும் பெரிய சாலையும், வடக்கிலிருந்து தெற்கு நோக்கிச் செல்லும் பெரிய சாலையும் கலிலேயாவைக் கடந்தே செல்லும்.*

*கடற்கரைச் சாலை என்பது அந்நாட்களில் மிகவும் பிரபலமான ஒரு சாலை. இந்த கடற்கரைச் சாலை தமஸ்குவிலிருந்து கலிலேயா வரை நீளுகிறது. அங்கிருந்து இடதுபுறம் திரும்பி, ஆப்பரிக்காவிற்கு நேராய் செல்லுகிறது.*

*கிழக்கத்திய நாடுகளிலிருந்து வரும் பொருட்கள் தமஸ்குவை வந்தடையும். அவைகள் மேற்கில் கலிலேயாவுக்கும் அங்கிருந்து ஆப்பிரிக்காவிற்கும் கொண்டுசெல்லப்படும். கிழக்கில் செல்லும் பாதையானது, கலிலேயா வழியாக கடந்தே மற்ற கிழக்கத்திய நாடுகளுக்கு செல்லும். எனவே அது ஒரு வணிகப் பாதை.*

*இப்படியிருப்பதால் அங்கு பல்வேறு மக்கள் கலப்புகள் நேரிடும். எருசலேமில் அப்படியில்லை. எருசலேம் அமைந்திருக்கும் நிலப்பரப்பு அதை தனிமைபடுத்தி வைத்திருந்தது. அது உயர்ந்த மலைப்பகுதியில் அமைந்துள்ளது. மக்கள் அங்கு செல்வதற்கு கவலைப்படவில்லை. இது கிழக்கே பாழடைந்த வனாந்திர பகுதியிலும், மேற்கில் கடற்கரையினாலும், தெற்கில் பாலைவனத்தினாலும் சூழப்பட்டிருப்பதால், எருசலேம் கலிலேயாவைப் போன்று வணிகம் நடைபெறும் இடம் இல்லை. உலகத்தின் மக்கள் நெருக்கடி கலிலேயாவில் மிக அதிகம்.*

*கலிலேயாவின் புவியியல் அமைப்பானது அதின் வரலாற்றை பெருமளவு பாதித்துள்ளது. இஸ்ரவேலுக்கு தேவன் தேசத்தை வாக்குப்பண்ணும்போது அது கலிலேயாவையும் உள்ளடக்கியிருந்தது. அவர்கள் அதை பன்னிரண்டு கோத்திரத்திற்கும் பங்கிட்டுக்கொண்டனர்.*

*கலிலேயா பகுதியானது ஆசேர், நப்தலி, மற்றும் செபுலோன் கோத்திரத்தாருக்கு பங்கிடப்பட்டது. யோசுவா 19.*

*ஆம், ஆசேர், நப்தலி மற்றும் செபுலோன்.*

*இது இந்த கோத்திரங்களின் எல்லைப்பகுதி. ஆனால் இந்த கோத்திரங்கள் ஒரு பெரிய தவறை செய்துவிட்டனர். வனாந்திரத்தில் சுற்றித் திரிந்து, பின்பு தேவன் எல்லா கோத்திரங்களையும் ஒருங்கமைக்கிறார். கானானியர்களை மொத்தமாய் அழித்துவிடும்படிக்கு அவர்களிடத்தில் கட்டளையிடுகிறார்.*

*செபுலோனும் நப்தலியும் அதைச் செய்யவில்லை. இவர்கள் கானானியர்களை அழிக்காததால், துவக்கத்திலிருந்தே அவர்களோடு கலக்க ஆரம்பித்துவிட்டனர்.*

*கிறிஸ்து பிறப்பதற்கு 800 ஆண்டுகளுக்கு முன்பு அசீரியர்கள் அந்த தேசத்தைச் சுற்றி வளைத்து, ஜனங்களை சிறைபிடித்து கொண்டுபோயினர். சில புதிய மக்கள் கலிலேயாவில் தங்கினர்.*

***கி.மு.164இல் சைமன் மக்கபேயர்**, சீரியர்களை விரட்டியடித்து, கலிலேயர்களை மீட்டார்.*

*கி.மு.104இல் அரிஸ்டோபுலஸ் என்பவர் யூதர்களுக்காய் மீண்டும் கலிலேயாவை கைப்பற்றினார். அதின் குடிகளை அவர் கட்டாயமாக விருத்தசேதனம் செய்ய வைத்தார். எப்படியாயினும் அதை ஒரு யூத பட்டணமாய் மாற்றுவதற்கு அவர் முயற்சி செய்தார்.*

*8ஆம் நூற்றாண்டிலிருந்து 164க்குள்ளதாக, இந்த பகுதி பல புதிய மக்கள் கூட்டத்தினரால் ஆக்கிரமிக்கப்பட்டது.*

*164இல் மீதியானவர்கள் அங்கிருந்தனர்.*

*104இல் அது மீண்டும் யூதர்களால் கைப்பற்றப்பட்டு, அங்ஙனம் யூத ஜனங்கள் அதிகமாய் குடியமர்த்தப்பட்டனர்.*

*அந்த நூற்றாண்டில், புறஜாதி மக்களின் அதிகப்படியான ஈடுபாட்டினால், யூத மார்க்கத்தின் பாரம்பரிய தாக்கம் வெகுவாய் குறைந்திருந்தது.*

*ஆகையினால் அது பல்வேறு மாற்றத்திற்கு உட்பட்ட பகுதி, புதிய சிந்தனைகளையும் செல்வாக்கையும் வரவேற்றது. ஆகவே இயேசுவுக்கு எருசலேமின் கதவுகள் மூடப்படுவதற்கும், அவரை சிலுவையில் அறைவதற்கும் முன்பு, செழிப்பான மண்ணில் சத்தியத்தை கேட்கக்கூடிய செவிகள் நிறைந்திருந்த கலிலேயாவில் தன்னுடைய ஊழியத்தைத் துவங்குகிறார்.*

***வச. 13, நாசரேத்தை விட்டு, செபுலோன் நப்தலி என்னும் நாடுகளின் எல்லைகளிலிருக்கும் கடற்கரைக்கு அருகான கப்பர்நகூமிலே வந்து வாசம்பண்ணினார்.***

*அவர் நாசரேத்தை விட்டு வெளியேறியதற்கு காரணம், அவர்கள் அவரை நாசரேத்தை விட்டு துரத்தினார்கள். அந்த கூட்டத்தினர் அவரைக் கொல்ல வகைதேடினர். அவர் தன் ஜீவனைக் காப்பதற்காக அங்கிருந்து ஓட நேரிட்டது.*

***கப்பர்நகூமிலே வந்து வாசம்பண்ணினார்.***

*இயேசு தன்னுடைய 30வயது வரை நாசரேத்தில் வசித்தார். அவர் கடைசியாய் தன்னை யார் என்று ஜெப ஆலயத்தில் அறிவிக்கிறார்.*

***லூக்கா 4:21, அப்பொழுது அவர் அவர்களோடே பேசத்தொடங்கி: உங்கள் காதுகள் கேட்க இந்த வேதவாக்கியம் இன்றையத்தினம் நிறைவேறிற்று என்றார்.***

*அவர்கள் கோபங்கொண்டார்கள். அவர்கள் அவரை மலையுச்சிக்கு கொண்டுசென்றனர். அங்கிருந்து அவரை கீழே தள்ளவிடப்போகிறார்கள். அவர்கள் அவரை விரும்பவில்லை. தீர்க்கதரிசிக்கு தன்னுடைய சொந்த ஊரில் கனம் இல்லை என்பதினால், அவர் கப்பர்நகூமில் தங்குகிறார்.*

*கப்பர்நகூம் என்ற வார்த்தைக்கு "நாகூமின் பட்டணம்" என்று அர்த்தம்.*

*நாகூம் தீர்க்கதரிசியைத் தொடர்ந்தே அந்த பட்டணத்திற்கு அவ்வாறு பெயர் வந்தது என்று சிலர் சொல்லுகின்றனர். நமக்கு தெரியாது. நாகூம் என்ற வார்த்தையை மொழிபெயர்த்தால், "இரக்கம்" என்று பொருள்படும். "இரக்கத்தின் பட்டணம்" என்பதே அந்த இடத்தின் பெயராயிருந்திருக்கிறது.*


*அது மிகவும் பிரபலமான சிறிய பட்டணம். இயேசுவின் நாட்களில் அது செழிப்பான ஒரு ஸ்தலமாயிருந்துள்ளது. மத்தேயுவின் ஆயத்துறையும் அங்கேயே இருந்தது.*

***மத்தேயு 9:9, இயேசு அவ்விடம் விட்டுப் புறப்பட்டுப்போகையில், ஆயத்துறையில் உட்கார்ந்திருந்த மத்தேயு என்னும் ஒரு மனுஷனைக் கண்டு: எனக்குப் பின்சென்றுவா என்றார்; அவன் எழுந்து, அவருக்குப் பின்சென்றான்.***

*அங்கிருந்து தான் இயேசு தன்னுடைய சீஷர்களுக்கு அழைப்புக் கொடுக்கிறார். யோவான் 1. இயேசு அழைப்புகொடுத்த தன்னுடைய முதல் கூட்ட சீஷர்களை கப்பர்நகூமிலிருந்தே தெரிந்துகொள்ளுகிறார்.*

*4ஆம் அதிகாரத்தில் அவர் மீண்டும் கப்பர்நகூமில் தன்னுடைய சீஷர்களை சந்திப்பதை நாம் பார்க்கமுடியும். கப்பர்நகூமிலிருந்தே இயேசு அற்புதத்திற்கு மேல் அற்புதங்களை நிகழ்த்தினார்.*

*கப்பர்நகூமில் இயேசு செய்த எட்டு அற்புதங்களை மத்தேயு சுவிசேஷம் பதிவுசெய்துள்ளது.*




*இந்த நிலப்பரப்பு சரியான ஸ்தலமாய் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. கலிலேயாக் கடலில் வடக்கு நுனியில் முக்கியமான ஸ்தலமாய் இது அமைந்திருக்கிறது.*

*வச. 13,* ***<u>செபுலோன் நப்தலி</u> என்னும் நாடுகளின் எல்லைகளிலிருக்கும் கடற்கரைக்கு***

*இந்த கோத்திர நிலப்பரப்பு செபுலோன் கோத்திரத்திற்கும் நப்தலி கோத்திரத்திற்கும் பிரித்துக் கொடுக்கப்பட்டது. 13ஆம் வசனத்தின் இறுதியில் அது கலிலேயா என்றும், 14ஆம் வசனத்தின் இறுதியில் "***புறஜாதியாருடைய கலிலேயாவிலே***" என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.*

*மற்ற மக்களின் ஊடுருவல் இல்லாத காலகட்டத்தில் இது யூதர்களின் கலிலேயாவாக இருந்தது.*

*கப்பர்நகூமின் சோகம் மத்தேயுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.*

***மத்தேயு 11:23-24, வானபரியந்தம் உயர்த்தப்பட்ட கப்பர்நகூமே, நீ பாதாளபரியந்தம் தாழ்த்தப்படுவாய்; உன்னில் செய்யப்பட்ட பலத்த செய்கைகள் சோதோமிலே செய்யப்பட்டிருந்ததானால், அது இந்நாள் வரைக்கும் நிலைத்திருக்கும். 24. நியாயத்தீர்ப்புநாளிலே உனக்கு நேரிடுவதைப்பார்க்கிலும், சோதோம் நாட்டிற்கு நேரிடுவது இலகுவாயிருக்கும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்.***

*கப்பர்நகூம் இயேசுவின் பட்டணம் என்பதினால் அது வானபரியந்தம் உயர்த்தப்பட்டது. இயேசுவின் பட்டணமாய் இருக்கக்கூடிய எந்த பட்டணமும் பூமியில் இதுவரை நடந்த மிக உன்னதமான நபரை உடையதாயிருக்கும்.*

*அவர்கள் வானபரியந்தம் உயர்த்தப்பட்டாலும், பாதாள பரியந்தம் தாழ்த்தப்பட்டனர்.*

*மற்ற எல்லா பட்டணங்களைக் காட்டிலும் மிகவும் அழகான இடத்தில், மலைகளுக்கு கீழே, கடற்கரையோரத்தில் அந்த பிரம்மாண்ட பட்டணம் அமைந்துள்ளது.*

*இயேசு கலிலேயாவைத் தேர்ந்தெடுத்தார்.*

*எருசலேமில் வசித்த யூதர்களுக்கு இந்த முழு செய்கையும் கோபத்தை வரவழைத்திருக்கும். மேசியா, கலிலேயாவிலிருக்கும் கப்பர்நகூமில் வசிப்பதா?*

*அங்கே இறையியல் நிபுணர்கள் இல்லை.*

*அது விவசாயிகளும் மீன்பிடி தொழிலாளர்களும் அதிகம் வசிக்கும் பகுதி.*

*பிரம்மாண்டமான யூத சிந்தனையாளர்களெல்லாரும் எருசலேமில் வசித்தனர்.*

*தேவனுடைய வெளிப்பாடு எருசலேமுக்கு வந்தது.*

*எருசலேம் என்பது புனித நகரம், மேசியாவின் வருகைக்கு உகந்த ஒரு ஸ்தலம்.*

*இந்த கலிலேயாவின் மேசியா நகைப்புக்குரியவர்.*

***யோவான் 7:40-41, ஜனங்களில் அநேகர் இந்த வசனத்தைக் கேட்டபொழுது: மெய்யாகவே இவர் தீர்க்கதரிசியானவர் என்றார்கள். 41. வேறுசிலர்: இவர் கிறிஸ்து என்றார்கள். வேறுசிலர்: கிறிஸ்து கலிலேயாவிலிருந்தா வருவார்?***

***யோவான் 1:46, அதற்கு நாத்தான்வேல்: நாசரேத்திலிருந்து யாதொரு நன்மை உண்டாகக்கூடுமா என்றான். அதற்குப் பிலிப்பு: வந்து பார் என்றான்.***

***யோவான் 7:52, அதற்கு அவர்கள்: நீரும் கலிலேயனோ? கலிலேயாவிலிருந்து ஒரு தீர்க்கதரிசியும் எழும்புகிறதில்லை என்பதை ஆராய்ந்துபாரும் என்றார்கள்.***

*ஆனால் கலிலேயாவிலிருந்தே பெரிய தீர்க்கதரிசி எழும்புகிறார். அவர்கள் தங்கள் வேதத்தை தெளிவாய் அறிந்திருந்தனர் என்று நம்பினர்.*

*அவர்கள் ஏசாயாவின் தீர்க்கதரிசனத்தை மறந்துவிட்டனரா?*

*ஆகாஸ் துன்மார்க்கமான ஒரு ராஜாவாயிருந்தான். இஸ்ரவேலில் விக்கிரக ஆராதனையை அறிமுகப்படுத்தினான். மோளோகின் ஆராதனையை அனுமதிக்கிறான். மோளோகு என்பது அம்மோனியர்களின் பயமுறுத்தும் கடவுள். மோளோகை ஆராதிப்பவர்கள் தங்கள் குழந்தைகளை தீக்கடக்கப்பண்ணுவது வழக்கம்.*

*இந்த மோளோகின் ஆராதனை ஆகாஸினால் ஒலிவ மலையில் ஏற்படுத்தப்பட்டது. மோளோகின் வெண்கல சிலை ஸ்தாபிக்கப்பட்டது. ஒலிவ மலையில் இருந்த இந்த சிலையின் பாதத்தில் மூட்டப்பட்ட தீயில் குழந்தைகள் தூக்கி வீசப்பட்டனர்.*

*மேலும் ஆகாஸ், ஆலயத்தின் கதவை இழுத்து பூட்டி, உள்ளிருந்த அனைத்தையும் அழுகும்படியும் கெட்டுப்போகும்படியும் செய்தான். இதுவே ஏசாயா தீர்க்கதரிசியின் காலகட்டம். இஸ்ரவேல் வரலாற்றில் ஒரு பயங்கரமான இருண்ட காலம் என்று ஒன்று இருக்குமானால் அது இதுவாகத்தான் இருக்கும்.*

***ஏசாயா 8:19-22, அவர்கள் உங்களை நோக்கி: அஞ்சனம் பார்க்கிறவர்களிடத்திலும், முணுமுணென்று ஓதுகிற குறிகாரரிடத்திலும் விசாரியுங்கள் என்று சொல்லும்போது, ஜனங்கள் தன் தேவனிடத்தில் விசாரிக்கவேண்டிய தல்லவோ? உயிருள்ளவர்களுக்காகச் செத்தவர்களிடத்தில் விசாரிக்கலாமோ? 20. வேதத்தையும் சாட்சி ஆகமத்தையும் கவனிக்கவேண்டும; இந்த வார்த்தையின்படியே சொல்லாவிட்டால், அவர்களுக்கு விடியற்காலத்து வெளிச்சமில்லை. 21. இடுக்கண் அடைந்தவர்களாயும் பட்டினியாயும் தேசத்தைக் கடந்துபோவார்கள்; அவர்கள் பட்டினியாயிருக்கும்போது, மூர்க்கவெறிகொண்டு, தங்கள் ராஜாவையும் தங்கள் தேவனையும் தூஷிப்பார்கள். 22. அவர்கள் அண்ணாந்துபார்ப்பார்கள், பூமியையும் நோக்கிப்பார்ப்பார்கள்; ஆனாலும் இதோ, இக்கட்டும் அந்தகாரமும் இருக்கும்; இடுக்கத்தால் இருளடைந்து, அந்தகாரத்திலே தள்ளூண்டு அலைவார்கள்.***

*அந்த பகுதி இருளடைந்திருந்தது. தேவ ஜனங்கள் இருளில் வாசம்பண்ணினார்கள். தேசமே இருண்டது.*

*அவர்களில் தீமைகளுக்கு மத்தியில் அவர்கள் மிகவும் கொடுமையான ஒரு இருளின் ஆதிக்கத்திற்கு உட்படுத்தப்பட்டிருந்தனர்.*

***ஏசாயா 9:1, ஆகிலும் அவர் செபுலோன் நாட்டையும், நப்தலி நாட்டையும் இடுக்கமாய் ஈனப்படுத்தின முந்தின காலத்திலிருந்ததுபோல அது இருண்டிருப்பதில்லை; ஏனென்றால் அவர் கடற்கரையருகிலும், யோர்தான் நதியோரத்திலுமுள்ள புறஜாதியாருடைய கலிலேயாவாகிய அத்தேசத்தைப் பிற்காலத்திலே மகிமைப்படுத்துவார்.***

*ஏசாயா இந்த தீர்க்கதரிசன செய்தியை உரைப்பதற்கு சற்று முன்னரே, கலிலேயாவிலிருந்த குடிகள், திக்லாத் பிலேசர் என்னும் அசீரிய ராஜாவினால் சிறைபிடிக்கப்பட்டு கொண்டுபோகப்பட்டனர்.*

*அதைக் குறித்து நாம் 2 இராஜாக்கள் 15ஆம் அதிகாரத்தில் வாசிக்கலாம். அவன் உள்ளே புகுந்து அங்கிருந்த எல்லாவற்றையும் எடுத்துக்கொண்டு, மக்களை இழுந்து சென்றான். அந்த தேசம் பாழும் வீணுமாய் இருந்தது.*

*ஆரம்பத்தில் குறைவான பாடுகளுக்கு உட்படுத்தப்பட்டனர். பின்னர் வேதனை தரக்கூடிய மகா உபத்திரவத்திற்கு ஆளாக்கப்பட்டனர். ஆனால் எல்லா நேரத்திலும் இந்த வழிகளில் ஒளி வராது. அது மிகவும் கொடூரமான வழிகளில் தேசத்தை வந்தடையும்.*

***ஏசாயா 9:2, இருளில் நடக்கிற ஜனங்கள் பெரிய வெளிச்சத்தைக் கண்டார்கள்; மரண இருளின் தேசத்தில் குடியிருக்கிறவர்களின்மேல் வெளிச்சம் பிரகாசித்தது.***

*சிறையிருப்பிற்கு கொண்டுசெல்லப்பட்ட தெற்கு இராஜ்யம், மீண்டு திரும்பிவந்தது. ஆனால் வடக்கு இராஜ்யம் திரும்பவில்லை.*

*வடக்கு இராஜ்யத்தின் கவலையும், இருளும், தண்டனையும் தெற்கு இராஜ்யத்தைக் காட்டிலும் அதிகம். தேவன் தன்னுடைய மகா பெரிய இரக்கத்தினாலும் தயவினாலும்,*

*பெரிய நியாயத்தீர்ப்பை அடைந்த இந்த தேசமே பெரிய இரட்சிப்பையும் சந்திக்கும் என்று அனுமதித்துள்ளார்.*

*அதிகம் தண்டனைக்கு உட்படுத்தப்பட்டதே அதிக ஆசீர்வாதத்தையும் சுதந்தரித்துக்கொள்ளும்.*

*அதிகம் வெறுக்கப்பட்டதே அதிகம் நேசிக்கப்படுகிறது.*

*கலிலேயாவில் ஒளி உதிக்கும். சாதாரண கலிலேயாவில் அல்ல, புறஜாதியினருடைய கலிலேயாவில் ஒளி உதிக்கும்.*

***கலிலேயா:***

*புறஜாதியினரால் கைப்பற்றப்பட்டது.*

*புறஜாதியினரால் சிறைபிடிக்கப்பட்டது.*

*புறஜாதியினரால் நிரப்பப்பட்டது.*

*புறஜாதியினரின் எண்ணிக்கை அதிகமாய் கொண்டிருந்தது. அவர்கள் தான் மேசியாவின் வருகையை எதிர்கொள்ளப்போகிறார்கள்.*

தேவன் யூதர்களை மட்டுமல்லாது புறஜாதிகளையும் இரட்சிப்பதை சித்தமாய் கொண்டுள்ளார் என்பதற்கு இதுவே மிகத் தெளிவான ஆதாரம். மதச்சடங்காச்சாரம், மார்க்கம், பாரம்பரியம், ஆலயங்கள், பலியிடும் மார்க்க ஒழுங்குகள் ஆகியவற்றிற்கு அப்பாற்பட்டு, தேவன் தன்னுடைய இரட்சிப்பை எல்லோருக்கும் சாத்தியமாக்குகிறார்.

***ஏசாயா 9:3, அந்த ஜாதியைத் திரளாக்கி, அதற்கு மகிழ்ச்சியைப் பெருகப்பண்ணினீர்; அறுப்பில் மகிழ்கிறதுபோலவும், கொள்ளையைப் பங்கிட்டுக்கொள்ளுகையில் களிகூருகிறதுபோலவும், உமக்குமுன்பாக மகிழுகிறார்கள்.***

*ஏசாயா சொல்லுவதுபோல, தேவன் எதிர்காலத்தைப் பார்க்கிறவர். தேசம் இருளை சந்திக்கும்போது, வடக்கு இராஜ்யம் மங்கலாகும்போது, மேசியாவின் ஒளி உதயமாகும். அவர்கள் ஒரு பொற்காலத்திற்குள் நுழையப்போகிறார்கள்.*

*வச.3ல் ஆயிரவருட வாக்குப்பண்ணப்படுகிறது.*

*அவர்களுக்கு அதிகமான மகிழ்ச்சி வாக்குப்பண்ணப்படுகிறது. தங்கள் அறுவடையை பங்கிட்டுக்கொள்ளும்போது மனிதர்கள் மகிழ்ச்சியடைவதுபோல அவர்களின் இந்த அறுவடையில் அவர்கள் மகிழ்ச்சியடைகிறார்கள். அது மிகப்பெரிய மகிழ்ச்சியின் நாளாக இருக்கப்போகிறது.*

***ஏசாயா 9:4, மீதியானியரின் நாளில் நடந்ததுபோல, அவர்கள் சுமந்த நுகத்தடியையும், அவர்கள் தோளின்மேலிருந்த மிலாற்றையும், அவர்கள் ஆளோட்டியின் கோலையும் முறித்துப்போட்டீர்.***

*கிதியோன் மீதியானியர்களை முறியடித்ததுபோல தேவன் கலிலேயாவுக்கு வந்து அவர்களின் எதிரிகளை முறியடிக்கப்போகிறார். தேவன் அவர்களை*

*விடுதலையாக்கப்போகிறார். அவர்களின் விளக்கை ஏற்றப்போகிறார். அவர்களுக்கு சுதந்திரத்தைக் கட்டளையிடப்போகிறார்.*

***ஏசாயா 9:5, அமளியாய் யுத்தம்பண்ணுகிற வீரருடைய ஆயுதவர்க்கங்களும், இரத்தத்தில் புரண்ட உடுப்பும் அக்கினிக்கு இரையாகச் சுட்டெரிக்கப்படும்.***

*தேவன் வந்து சத்துருக்களை எரித்துபோடப் போகிறார். எல்லாவற்றையும் சுத்தப்படுத்தி, கலிலேயாவுக்கு பொற்காலத்தை ஏற்படுத்தப்போகிறார். மேசியா கலிலேயாவுக்கு வரப்போகிறார்.*

*திருச்சபை காலகட்டத்தில் எந்த இடைவெளியையும் பழைய ஏற்பாடு பார்க்கவில்லை. இங்கே ஏசாயா கலிலேயாவுக்கு வரப்போகிற மேசியாவின் பொற்காலத்தைப் பற்றி அறிவிக்கிறார். ஆனால் இயேசு கிறிஸ்துவை மறுதலித்த யூதர்கள், மேசியாவினால் வரவிருக்கிற பொற்காலமானது அவருடைய முதல் வருகை என்பதை ஏற்க மறுத்தனர்.*

***யார் அந்த ஒளி?***

*ஏசாயா ஒளியைக் குறித்து சொல்லிக்கொண்டேயிருக்கிறார். ஆனால் அந்த ஒளி யார் என்பதை அறிவிக்கவில்லை. ஆனால் அது பொற்காலமாய் இருக்கும் என்பதையும், அதில் நுகங்கள் முறிக்கப்பட்டு, விடுதலையும், வெற்றியும், ஒளியும் உதிக்கும் என்று அடிக்கடி சொல்லுகிறார்.*

***ஏசாயா 9:6-7, நமக்கு ஒரு பாலகன் பிறந்தார்; நமக்கு ஒரு குமாரன் கொடுக்கப்பட்டார்; கர்த்தத்துவம் அவர் தோளின்மேலிருக்கும்; அவர் நாமம் அதிசயமானவர், ஆலோசனைக்கர்த்தா, வல்லமையுள்ள தேவன், நித்திய பிதா, சமாதானப்பிரபு என்னப்படும். 7. தாவீதின் சிங்காசனத்தையும் அவனுடைய ராஜ்யத்தையும் அவர் திடப்படுத் , அதை இதுமுதற்கொண்டு என்றென்றைக்கும் நியாயத்தினாலும் நீதியினாலும் நிலைப்படுத்தும்படிக்கு, அவருடைய கர்த்தத்துவத்தின் பெருக்கத்துக்கும், அதின் சமாதானத்துக்கும் முடிவில்லை; சேனைகளின் கர்த்தருடைய வைராக்கியம் இதைச் செய்யும்.***

*அவருடைய சர்வ மகத்துவமுள்ள கிருபையினால், தேவன் எதிர்பாராததை செய்கிறார்.*

*யூதர்களுக்கு மட்டுமல்லாது, புறக்கணிக்கப்பட்டவர்கள், உதாசீனப்படுத்தப்பட்டவர்கள், பாதிக்கப்பட்டவர்கள், வெறுக்கப்பட்டவர்கள், அறியாமையிலுள்ளவர்கள், மார்க்க சடங்காச்சாரத்திற்கு உட்படாதவர்கள் என்று கலிலேயாவில் வாசம்பண்ணின அனைத்து தரப்பின மக்களுக்காகவும் தன்னுடைய குமாரனை அனுப்புகிறார்.*

*பெரிய இருளில் உள்ளவர்களுக்கு, பெரிய ஒளியை அனுப்புகிறார்.*

*அதுவே நம் தேவனுடைய கிருபை!*

*கலிலேயாவிலும் அதைச் சுற்றிலுமே இயேசு தன்னுடைய வாழ்நாளின் பெரும்பான்மையை கழித்தார்.*

- *அவர் அங்கே வளர்ந்தார்,*
- *அவர் கிராமத்திலிருந்து கிராமங்களுக்குச் சென்றார்,*
- *அவருடைய சீஷர்களை அங்கிருந்தே தெரிந்துகொள்கிறார்,*

- *அங்கிருப்பவர்களை இரட்சித்தார்,*
- *அங்கிருப்பவர்களை சொஸ்தமாக்கினார்!*

*புறஜாதியினரின் கலிலேயா!*

*கலிலேயாவில் ஒளி உதிக்கும், உலகத்தில் ஒரு புதிய நாள் உதயமாகிறது. பல நூற்றாண்டுகளாய் அந்த தேசம் இருளில் இருந்துள்ளது.*

***வச.15, இருளில் இருக்கும் ஜனங்கள் பெரிய வெளிச்சத்தைக் கண்டார்கள்; மரண இருளின் திசையிலிருக்கிறவர்களுக்கு வெளிச்சம் உதித்தது என்று,***

*அன்பு மற்றும் இரக்கத்தின் வார்த்தைகளினாலும் கிரியைகளினாலும் இந்த இருளை அகற்றுவதற்கும் மரணத்தை மாற்றுவதற்கும் இயேசு வந்தார்.*

## *அப்பியாசம்:*

***இயேசு எங்கே சென்றார்?***

*தேவையுள்ள மக்களிடத்திற்கு சென்றார்.*

*உலகத்தில் மிகவும் தேவையுள்ள மக்களுக்கும், ஏற்றுக்கொள்ளும் மனப்பான்மை கொண்ட மக்களுக்குமே கிறிஸ்துவின் ஊழியம் அவசியப்பட்டது.*

*தேவனை அறியவேண்டும் என்று ஏங்கின கொர்நெலியு என்ற முதல் புறஜாதியினிடத்திலேயே தேவன் தன்னுடைய தூதுவர்களை அனுப்புகிறார்.*

*கேட்பதற்கு காத்திருக்கிற ஜனங்களிடத்திற்கு நாம் கடந்துசெல்ல வேண்டும்.*

*தேவையுள்ள ஜனங்களே, கேட்பதற்கும் திறந்த மனப்பான்மையோடும் இருப்பர். என்னோடு சேர்ந்து லாட்வியன் மற்றும் ரஷ்ய திருச்சபைகளுக்கு பயணம் செய்தவர்களுக்கு அது மிக நன்றாய் தெரியும்.*

*ஆகையால் ராஜா, சரியான இடத்தில் சரியான நேரத்தில் தன்னுடைய ஊழியத்தைத் துவங்குகிறார்.*

***சரியான செய்தி.***

***வச. 17, அதுமுதல் இயேசு: மனந்திரும்புங்கள், பரலோகராஜ்யம் சமீபித்திருக்கிறது என்று பிரசங்கிக்கத் தொடங்கினார்.***

*இயேசுவின் செய்தி என்ன என்று யாரும் அவரிடத்தில் விவாதிக்க அவசியப்படவில்லை.*

*அவர் தன்னுடைய வாயைத் திறந்து பேசினார். அங்கே யாருக்கும் எந்த சந்தேகமும் எழவில்லை. ஒளி தகர்க்கப்பட்டபோது, ஒளி உதயமானது.*

*மத்தேயு 3:2ஆம் வசனத்திலுள்ள இதே வார்த்தைகளைக்கொண்டே யோவான் ஸ்நானகனும் தன்னுடைய ஊழியத்தை துவக்கினார்.*

*மனந்திரும்புவதே முதல் காரியம்.*

*இரண்டாவது காரியம், அந்த மனந்திரும்புதலுக்கான காரணத்தை அறிதல்.*

*ஒளி உதயமானபோது, இயேசு வந்து, இருளின் அறியாமையில் பேதையாயிருந்த மனிதர்களை விழி படையச் செய்தார்.*

*''உங்கள் மீது இருள் சூழ்ந்திருக்கிறது, ஏனென்றால் அது உங்களுக்குள் இருக்கிறது. மனந்திரும்பினால் மட்டுமே அந்த இருளானது உங்கள் இருதயத்தை விட்டு கடந்து போகும்'' என்று இயேசு அவர்களுக்குப் போதித்தார்.*

*மனந்திரும்புதல் என்றால் என்ன?*

*அதாவது நீங்கள் பாவத்திலிருக்கிறீர்கள், அதிலிருந்து திசை திரும்பியிருக்கிறீர்கள் என்று அர்த்தம்.*

*உங்களுடைய வாழ்க்கை மாற்றப்பட்டது என்று அர்த்தம்.*

*மனந்திரும்புதல் என்பது, திசை திரும்பி, தேவனுடைய ராஜ்யத்தின் பங்காய் மாறுவது என்று அர்த்தம்.*

*''மெடானோ'' என்றால் முழுமையான மாற்றம் என்று பொருள்.*

***2 தீமோத்தேயு 2:25-26, எதிர்பேசுகிறவர்கள் சத்தியத்தை அறியும்படி தேவன் அவர்களுக்கு மனந்திரும்புதலை அருளத்தக்கதாகவும், 26. பிசாசானவனுடைய இச்சையின்படி செய்ய அவனால் பிடிபட்டிருக்கிற அவர்கள் மறுபடியும் மயக்கந்தெளிந்து அவன் கண்ணிக்கு நீங்கத்தக்கதாகவும், சாந்தமாய் அவர்களுக்கு உபதேசிக்கவேண்டும்.***

*மனந்திரும்புதல் என்பது உண்மையை அறிந்துகொள்ளும் பாதையில் பயணிப்பது.*

*பெந்தெகொஸ்தே நாளில் பேதுரு பிரசங்கித்த ''மனந்திரும்பி ஞானஸ்நானம் பெறுங்கள்'' என்னும் செய்தியே திருச்சபை வரலாற்றின் முதல் பிரசங்கம்.*

*மனந்திரும்புதலின் செய்தி ஆவிக்குரிய வறுமையை அடையாளங்காட்டுகிறது.*

*நீ தவறான பாதையில் சென்றுகொண்டிருக்கிறாய். உன் முழு வாழ்க்கையையும் மாற்றி கிறிஸ்துவினிடத்திற்கு வா.*

*''பரலோகராஜ்யம் சமீபித்திருக்கிறது'' என்பதே அதற்கான காரணம்.*

*நீண்ட நாட்களாக மக்கள் எதிர்பார்த்து காத்திருந்த மேசியாவின் ஆளுகை இங்கே வந்துவிட்டது என்று இயேசு சொல்லுகிறார். பரலோகராஜ்யம் சமீபித்திருக்கிறது.*

*பழைய ஏற்பாட்டின் தீர்க்கதரிசிகள் முன்னறிவித்ததுபோல, தேசம் ஆசீர்வாதமாயிருக்கும், தேவனுடைய ஜனங்கள் தேசத்திலே குடியிருப்பார்கள் என்னும் பழைய ஏற்பாட்டின் தீர்க்கதரிசனத்தை நிறைவேற்ற ஆயத்தமாயிருக்கிறோம். அவர்கள் தங்கள் சத்துருக்களை*

*ஆளுகை செய்வார்கள். அங்கே இளைப்பாறுதல் தங்கியிருக்கும். சமாதானம் நிலைத்திருக்கும்.*

*சிங்கம் ஆட்டுக்குட்டியோடே படுத்திருக்கும். தேவன் கல்லான இருதயத்தை எடுத்து அதை சதையினால் நிரப்பி, அதில் தன் ஆவியை ஊற்றி, அவர்களை மறுபிறப்பு என்னும் தண்ணீரினால் கழுவும் விசித்திரமான எல்லா காரியங்களும் நடைபெறும். பரலோகராஜ்யம் சமீபித்திருக்கிறது.*

*ஆனால் அது தாமதிக்கவேண்டியுள்ளது. ராஜ்யத்தின் மாம்சீக காரியங்கள் தள்ளிவைக்கப்படவேண்டியுள்ளது.*

*நம்முடைய வாழ்க்கையில் மேசியாவின் ஆளுகை இருக்கிறது. மனந்திரும்புதல் அவசியம். அவருடைய ஊழியத்தின் துவக்கத்திலிருந்தே இயேசு மனந்திரும்புதலைக் குறித்து பிரசங்கித்தார்.*

*இயேசு காரியங்களை நிச்சயத்துடன் மட்டுமல்லாது அதிகாரத்துடனும் பிரசங்கித்தார். அதிகாரத்துடன் பிரசங்கிக்க ஒரே வழி தான் உண்டு.*

*அதிகாரமுள்ள தேவனுடைய வார்த்தை. இயேசு முழுமையான, உடையாத அதிகாரத்தோடு பிரசங்கித்தார்.*

***மத்தேயு 7:28-29, இயேசு இந்த வார்த்தைகளைச் சொல்லி முடித்தபோது, அவர் வேதபாரகரைப்போல் போதியாமல், அதிகாரமுடையவராய் அவர்களுக்குப் போதித்தபடியால், 29. ஜனங்கள் அவருடைய போதகத்தைக்குறித்து ஆச்சரியப்பட்டார்கள்.***

*இயேசுவே தேவனை முழுமையாய் பிரதிபலிக்கும் பிரசங்கியார். தேவனே அவருடைய ஆதாரம். எனவே அவர் நிச்சயத்துடனும், அதிகாரத்துடனும், தெய்வீக கட்டளையுடனும் பிரசங்கித்தார்.*

*இன்றும் அவருடைய செய்தியில் மாற்றமில்லை!*

*விசுவாசிக்கிற ஒரு கூட்டத்தை உருவாக்குவதற்கு, கடினமான பாதையில் இயேசு பயணிப்பதற்கு முன்பு, மனந்திரும்புங்கள், திரும்புங்கள், திரும்புங்கள், என்று தேவையுள்ள மனிதர்களிடம் கடந்து சென்று அவர்களின் வரவேற்பை முதலில் சம்பாதிக்கிறார்.*

*ஆகையால் இன்றும் அவர் தேவையுள்ள இருதயங்களை தேடி வருகிறார்.*

*பரிசுத்த ஆவியானவரின் கிரியைகளுக்கு திறந்திருக்கிற, வரவேற்கிற இருதயத்தில் அவருடைய மனமாற்றப் பணியை அவர் துவக்குகிறார்.*

*செய்தி ஒன்றே என்பதினாலும், கிறிஸ்துவும் ஒருவரே என்பதினாலும், அவர் செய்கிற கிரியையிலும் மாற்றமில்லை.*

*இயேசுவின் பாரம்பரியத்தில் நிற்பது என்பது எவ்வளவு மகிழ்ச்சியான விஷயம்?*

*கலிலேயா, யூதேயா, சபை காலகட்டம் அகிய எல்லாவற்றிலும் அவருடைய சத்தத்திற்கு செவிகொடுத்தவர்களுக்குள் ஆவிக்குரிய ரீதியான தேவனுடைய ராஜ்யம் வந்திறங்கியிருக்கிறது.*